THE EXAMINATION OF THE WITNESS
(Section 281 Code of Criminal Procedure)
IN THE JUDICIAL MAGISTRATE COURT, VALLIYOOR

| | | | |
|---|---|---|---|
| Calender | : | **CC.No.223/2021** | **PW.2** |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : | | |

STATEMENT OF WITNESS

| | | |
|---|---|---|
| Name | : திருமதி. பேச்சியம்மாள் | |
| Husband's Name | : திரு. முத்துகிருஷ்ணன் | |
| Village | : வள்ளியூர் | |
| Taluk | : ராதாபுரம் | |
| Employment | : இல்லத்தரசி | |
| Age | : 41 | Date:10.05.2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

**(Accused absent and petition U/s.317 Cr.P.C is filed and allowed)**

<u>முதல் விசாரணை</u> :–

1. நான் வள்ளியூரில் குடியிருந்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். ஆஜரில் இல்லாத எதிரியை பார்த்தால் எனக்கு தெரியும். அ.சா.1 எனது மச்சான் மனைவி. கடந்த 25.12.2019 ஆம் தேதி இரவு சுமார் 10.30 மணியளவில் அருகில் கதவை கொத்துகின்ற சத்தம் கேட்டு, நான் வெளியில் வந்து பார்த்தபோது, எதிரி மணிகண்டன் எங்கள் வீட்டின் பின்வாசல் கதவை அருவாள் வைத்து கொத்தி சேதப்படுத்தினார். அவர் என்னையும், அ.சா.1–யும் தேவடியா என்று ஆபாசமாக பேசினார். நடந்த சம்பவத்திற்கு அ.சா.1 வள்ளியூர் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தார். இது சம்பந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

2. எதிரி தரப்பு குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை இல்லை என்பதால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.